## 18. நீரே என்னை காண்கிற தேவன்

### பல்லவி

நீரே என்னை காண்கிற தேவன்
நீரே என்னை காக்கின்ற தேவன்

### அனுபல்லவி

*உம் கண்கள் என்னை நோக்கி இருக்குதே*
*உம் செவிகள் எனக்கு சாய்ந்திருக்குதே*

### சரணங்கள்

1. வருத்தபட்டு பாரம் சுமப்போர்
யாவரையும் சேர்த்து கொண்டீர்
வருத்தம் போக்கி பாரங்கள் நீக்கி
அன்பின் கரத்தால் அணைத்து கொண்டீர்
- நீரே என்னை

2. உம்மை போல என்னை மாற்ற
தன்னையே தந்திட்டீரே
பூமியில் ஜெயமாய் வாழ்வதற்கு
உந்தன் ஆவியை தந்துள்ளீரே
- நீரே என்னை

3. ஜீவ வசனத்தை பிடித்துக்கொண்டு
உலகத்தில் சுடர்களை போல
பிரகாசிக்கின்ற எங்கள் வாழ்வில்
கோணலும் மாறுபாடும் வெளியேற்றுமே
- நீரே என்னை

4. வளர்ச்சி பாதையில் நடத்தி செல்ல
ஊழியர்களை தந்துள்ளீரே
பூரண வளர்ச்சியை என்னில் காண
உமது வார்த்தையை கொடுத்துள்ளீரே
- நீரே என்னை